# சுயகற்றல் செயற்பாடு

## தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 9

**பின்வரும் வினாக்களுக்கான விடைகளை தெளிவாக எழுதி உமது பாடசாலை ஆரம்பிக்கும் போது தமிழ் பாட ஆசிரியரிடம் ஒப்படைக்குக.**

1.ஆசை,தோழன்,தந்தை,தாய்,மரம்,மலர்,இரவு,பகல்,உலகம்,உடல் ஆகிய சொற்களுக்கு தலா நான்கு ஒத்த சொற்கள் தருக.

2.நோய்,மறம்,பரி,நரை,நறை,முருகு,தேறல்,விரை,விறை,தரை ஆகிய சொற்களை வைத்து இவ்விரண்டு வாக்கியம் அமைக்குக.

3.பல சொல் ஒரு பொருள் உணர்த்துவதற்கும் பல பொருள் ஒரு சொல் உணர்த்துவதற்கும் பத்துப் பத்து உதாரணங்கள் தருக.

4.தமிழில் பயன்படுத்தப்படும் பிரதான நிறுத்தக்குறிகள் ஐந்தினை குறிப்பிட்டு அவற்றிற்கு தலா இரண்டு வீதம் உதாரணம் தருக.

5.காரணப்பெயர், இடுகுறிப்பெயர், காரணஇடுகுறிப்பெயர் என்பவற்றிற்கு தலா பத்து உதாரணங்கள் தருக.

6.வேற்றுமை என்றால் என்ன? வேற்றுமைகளை குறிப்பிட்டு அவற்றின் உருபு, சொல்லுருபு, பொருள் என்பவற்றினை விளக்குக

7. வினைச்சொல் என்றால் என்ன? வினைச்சொல்லின் வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.

8.உமது பாடசாலையில் நடைபெறவுள்ள முத்தமிழ் விழா அழைப்பிதழ் ஒன்றை எழுதுக.

**9.பின்வரும் தலைப்புக்களில் கடிதம் எழுதுக. (100 சொற்களுக்கு குறையாமல் எழுதவும்)**

**அ.உமது பிறந்தநாளிற்கு உமது நண்பனை அழைக்க ஒரு கடிதம்**

**ஆ.உமது நிறுவன திறப்பு விழாவிற்கு ஒரு கடிதம்**

10.பின்வரும் தலைப்புக்களில் கட்டுரை எழுதுக. (200 சொற்களுக்கு குறையாமல் எழுதவும்)

அ.தொற்று நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாப்போம்.

ஆ.நீரின் முக்கியத்துவம்

இ.வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான்.

ஈ.வீதி விபத்துக்களை தடுப்போம்.

உ.கொரோனா தொற்றில் இருந்து மீண்ட ஒரு மனிதனின் கதை